18. செலவழுங்குவித்தல் துறையில் அமைந்த ஐங்குறுநூற்றின் பத்துப் பாடற் கருத்துக்களை விவரிக்க.

19. தலைவியின் கற்பறம் தலைவனின் செலவை தடுத்து நிறுத்திய பாங்கினைக் கலித்தொகைப் பாடற் கொண்டு எழுதுக.

20. அட்டு மலர் மார்பனாகிய சேரலாதனின் கொடைத் திறத்தை விவரிக்க.



**S.No. 1225** **16 ACCTA 13**

(For candidates admitted from 2016–2021 batch)

B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2023.

Part III — Tamil – Major

பண்டைய இலக்கியம்

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளி.

1. கூதிர்ப் பாசறை - விளக்கம் தருக.

2. கார்கால மழை எவ்வாறு பெய்தது?

3. தேர்ப்பாகனைப் பார்த்து விரைவாகத் தேரை ஓட்டும்படித் தலைவன் கூறுவதற்குரிய காரணம் யாது? கூறுக.

4. நொதுமலர் வரைவு என்றால் என்ன?

5. செலவு அழுங்குவித்தல் குறித்து எழுதுக.

6. பரனோடு சேர்த்திய கல் என்பது எது? எவ் இலக்கியத்தில் இடம்பெறுகிறது?

7. ‘பிடி ஊட்டிப் பின் உண்ணும் களிறு’ என்ற தொடருக்கு உரிய விளக்கம் தருக.

8. திருப்பரங்குன்றத்து மயில்கள் அகவும் குரலோசை எதனை ஒத்திருந்தன?

9. ‘புலவரின் வரிசை அறிந்து ஈதல் அரிது’ என்ற பொருளில் பாடல் பாடியவர் யார்? யாருக்காகப் பாடினார்? கூறுக.

10. பதிற்றுப் பத்து இரண்டாம் பத்தினை யார், யாருக்காகப் பாடினார்? உரைக்க.

பகுதி ஆ — (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) கோப்பெருந் தேவியார் அமர்ந்துள்ள பாண்டில் என்னும் கட்டிலின் சிறப்பையும் அலங்காரத்தையும் எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) குளிர் கால இரவில் மகளிர் நிகழ்த்திய வழிபாட்டினையும் கொண்ட கோலத்தையும் நெடுநல்வாடை வழிநின்று விளக்குக.

12. (அ) வரைவு மலிதல் துறையமைந்த நற்றிணைப் பாடற் கருத்தில் பொதிந்துள்ள உள்ளுறை உவமத்தை விளக்குக.

(அல்லது)

(ஆ) கபிலர் பாடியுள்ள குறுந்தொகை குறிஞ்சித் திணைப் பாடற் கருத்தை எடுத்துரைக்க.



13. (அ) தலைவியைப் பிரிவதால் உண்டாகும் வருத்தத்தைத் தோழி எங்ஙனம் எடுத்துரைக்கின்றாள்? கூறுக.

(அல்லது)

(ஆ) பொருளீட்டத் தூண்டும் நெஞ்சைக் கடிந்து கொண்ட தலைவனின் சொல்லாற்றலைப் புலப்படுத்துக.

14. (அ) இளமையின் அருமைப் பாட்டைக் கூறிச் செலவைத் தடுத்து நிறுத்திய தோழியின் செயலினை விளக்குக.

(அல்லது)

(ஆ) திருமாலின் பெருமைகளாகப் பரிபாடல் உரைக்கும் கருத்துக்களை தருக.

15. (அ) மலையமான் திருமுடிக்காரியின் வெற்றிச் சிறப்பை வண்ணக்கன் பெருஞ்சாத்தனார் பாடுகின்ற தன்மையினைக் கூறுக.

(அல்லது)

(ஆ) சேரலாதனின் படைச்சிறப்பை ‘நிரைய வெள்ளம்’ பதிற்றுப்பத்து எங்ஙனம் வெளிப்படுத்துகிறது? கூறுக.

பகுதி இ — (3 × 10 = 30)

எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளி.

16. கோப்பெருந்தேவியின் பிரிவுத் துயரத்தையும், செவிலி, தோழியரின் ஆறுதல் மொழிகளையும் தொகுத்தெழுதுக.

17. நற்றிணைக் குறிஞ்சித் திணைப் பாடல்கள் வழி அறியலாகும் அக இலக்கியச் செய்திகளைப் புலப்படுத்துக.